# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)
*******

ஆணை எண். 89/மா/2021
நாள். 13.10.2021

திரு B. விஜயகுமார்,
திரு M. விஜயன்,
சென்னை–600 081. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம் –4,
பெருநகர சென்னை மாநகராட்சி
சென்னை–600 081. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை, துர்காதேவி நகர், எண்.14/15, சால்ட் குறுக்கு தெருவில் வசிக்கும் திரு B. விஜயகுமார் மற்றும் தண்டையார்பேட்டை சாஸ்திரி நகர், எண்.15/11, 1–வது தெருவில் வசிக்கும் திரு M. விஜயன் இருவரின் 01.09.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 89/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி தண்டையார்பேட்டை பகுதியில் வசிக்கும் திருவாளர்கள் B. விஜயகுமார் மற்றும் M.விஜயன் என்பவர்கள் சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம் –4க்கு உட்பட்ட வார்டு –41, அஜீஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண்.11/122, என்ற விலாசத்தில் வசித்துவரும் திரு. ஹீராலால் என்பவர் எந்த விதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல், மூன்று மாடி கட்டிடம் கட்டிக் கொண்டு இருக்கிறார். மேற்படி இச்செயல் தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரமைப்புச் சட்டம் –1971, மற்றும் சென்னை பெருநகர இரண்டாம் வளர்ச்சி திட்டம்–2026க்கு எதிராகவும், விதிமீறலாகவும் அமைகிறது.

மேற்கண்ட இந்த சட்ட விரோதமான உரிய கட்டுமான அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டிடம் தொடர்பாக முதல் மனுதாரர் சார்பில் சென்னை பெருநகர மாநகராட்சி அலுவலகத்திற்கு புகார் அளிக்கப்பட்டும் இதுவரை எந்த ஒரு உறுதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதைபோன்ற அனுமதியற்ற கட்டுமானத்தை தடுக்காமல் விடுவதால்தான் சென்னை மாநகரின் மற்ற குடியிருப்பு தெருக்களை போல எங்கள் பகுதி தெருவும் நாளுக்கு நாள் அகலம் குறுகிக்கொண்டே போகிறது.

மேலும் மேற்கண்ட விதிமீறல் கட்டிடம் மீது தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971, சட்டப்பிரிவு–56, மற்றும் 57 படி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டி முதல் மனுதாரர் சார்பில் எதிர் மனுதாரருக்கு புகார் கடிதம் 20.07.2020 அன்று அனுப்பப்பட்டது. இருப்பினும் தற்போதைய நாள் வரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை; மற்றும் புகார் மனு தொடர்பாக எந்த தகவலும் எங்களுக்கு அளிக்கவில்லை. அதனால் மேற்கண்ட அலுவலரின் செயல் கடமை தவறுதல், சென்னை பெருநகர மாநகராட்சிக்கு இழப்பு ஏற்படும் வண்ணம் செயல்படுதல் போன்ற காரணங்களுக்காக இந்த புகார் மனுவை விரைவில் விசாரணைக்கு ஏற்று தகுந்த நீதி வழங்கிட பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம் என இம்முறை மன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளனர்.

2) பெரு நகர சென்னை மாநகராட்சி 4–வது மண்டல அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர்கள் ஆகியோர் 16.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2021 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் 16.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்தனர். முறையீட்டு மனுதாரர்கள் தங்களது வாக்குமூலத்தில், " நாங்கள் முறையே 14/15 சால்ட் குறுக்கு தெரு, துர்காதேவிநகர், தண்டையார்பேட்டை, சென்னை–600 081 மற்றும் எண்.15/11, 1–வது தெரு, சாஸ்திரி நகர், தண்டையார்பேட்டை, சென்னை 81 என்கின்ற முகவரியில் வசித்து வருகிறோம். சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார் பேட்டை, மண்டலம் 4–க்கு உட்பட்ட வார்டு 41, அஜீஸ் நகர், அம்மன் கோவில் தெரு, கதவு எண். 11/122 என்ற விலாசத்தில் வசித்து வரும் திரு ஹீராலால் என்பவர் எந்த விதமான கட்டுமான அனுமதியும் பெறாமல் கடந்த 2017ம் ஆண்டு முதல், மூன்று மாடி கட்டிடம் கட்டிக்கொண்டு இருக்கிறார். மேற்படி இச்செயல் தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971 மற்றும் சென்னை பெருநகர இரண்டாம் வளர்ச்சி திட்டம் 2026க்கு எதிராகவும் விதிமீறலாகவும் அமைகிறது.

மேற்கண்ட இந்த சட்ட விரோதமான உரிய கட்டுமான அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானம் தொடர்பாக மனுதாரர் சார்பில் சென்னை பெருநகர மாநகராட்சி

எடுக்கப்படவில்லை. இதைபோன்ற அனுமதியற்ற கட்டுமானத்தை தடுக்காமல் விடுவதால்தான் மற்ற குடியிருப்பு தெருக்களைப் போல எங்கள் பகுதி தெரு நாளுக்கு நாள் அகலம் குறுகிக்கொண்டே போகிறது. மேற்கண்ட விதிமீறல்கள் கட்டிடம் மீது தமிழ்நாடு நகர்புற மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 சட்டப்பிரிவு 56 மற்றும் 57ன்படி உரிய நடவடிக்கைகள் மாநகராட்சி அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததது கண்டிக்கத்தக்கது.

மேலும் எங்கள் பகுதி இடம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாகத் தெரிகிறது. குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான இந்த இடத்தில் இதுபோன்ற தனியார் ஆக்கிரமைப்பு செய்து அனுமதியின்றி வீடுகளை கட்டுவது சட்டத்திற்கு புறம்பானது. எனவே எங்கள் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும், கட்டடம் கட்டும் நடவடிக்கைகளை நிறுத்திடவும் மாநகராட்சி அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணிவோடு கேட்டுக் கொள்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

4. மண்டல அலுவலர் தனது வாக்குமூலம் மற்றும் தனது 15.07.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள புகார்கள் தொடர்பாக மாநகராட்சி அலுவலர்களால் கடந்த 07.06.2019 அன்று கள ஆய்வு செய்ததன் அடிப்படையில் திரு ஹீராலால் என்பவர் மண்டலம் –4 பகுதி, 10, வார்டு 41, கதவு எண்.122, அம்மன் கோவில் தெரு, சிவாஜி நகர், கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021 என்ற முகவரியில் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தெரிய வந்தது. எனவே அந்த கட்டிடத்திற்கு கடந்த 07.06.2019 அன்று வேலை நிறுத்த தாக்கீது (Stop work Notice/Notice Calling for Approved Plan) வழங்கப்பட்டது. மேலும், அதன் தொடர்ச்சியாக கடந்த 27.10.2020 அன்று இக்கட்டிடத்திற்கு கட்டிடம் பூட்டி மற்றும் சீல் வைக்கும் தாக்கீது (Lock and Seal and Demolition Notice ) வழங்கப்பட்டது. மேலும் கடந்த 03.03.2021 அன்று இக்கட்டிடத்திற்கு பயன்பாட்டிலிருந்து வெளியேற அறிவுறுத்தும் தாக்கீது (De-occupation Notice) வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேற்குறிப்பிட்ட கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்காக 13.05.2021 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து 26.06.2021 அன்று கதவு எண்.122, அம்மன் கோவில் தெரு, சிவாஜி நகர், கொருக்குபேட்டை, சென்னை – 600 021 என்ற முகவரியில் திரு ஹீராலால் என்பவரால் அனுமதியின்றி கட்டப்பட்டு வந்த கட்டிடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் இதன் புகைப்படம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர்களின் மனு மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–வது மண்டல அலுவலர் வாக்குமூலம் மற்றும் அறிக்கைகள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள சென்னை மாவட்டத்தில் உள்ள தண்டையார்பேட்டை, மண்டலம் 4–க்கு உட்பட்ட வார்டு எண்.41, அஜிஸ் நகர், அம்மன்கோவில் தெரு, கதவு எண்.11/122, என்ற முகவரியில் திரு. ஹீராலால் என்பவர் அனுமதியின்றி கட்டிய கட்டிடத்திற்கு 07.06.2019 அன்று வேலை நிறுத்த தாக்கீதும் 27.10.2020 அன்று அக்கட்டிடத்திற்கு கட்டிடம் பூட்டி மற்றும் சீல் வைக்கும் தாக்கீது மற்றும் 03.03.2021 அன்று இக்கட்டிடத்திற்கு பயன்பாட்டிலிருந்து வெளியேற அறிவுறுத்தும் தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகின்றது. மேலும் 13.05.2021 பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் இக்கட்டிடத்தை பூட்டி சீல் வைப்பதற்காக அனுமதி பெறப்பட்டு 26.06.2021 அன்று கட்டிடம் பெருநகர சென்னை

மாநகராட்சி அலுவலர்களால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வு தொடர்பாக ஆதார ஆவணமாக புகைப்படமும் மண்டல அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் மண்டல அலுவலரின் அறிக்கையை ஏற்று இம்மனு மீதான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் மனுதாரர் தமது மனுவில் அனுமதி பெறாமல் கடந்த 2017ம் ஆண்டு முதல், மூன்று மாடி கட்டிடம் திரு ஹீராலால் என்பவரால் கட்டப்பட்டு வருவதாக பலமுறை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மனு அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்ற மனுதாரரின் முறையீடு தொடர்பாக 15.07.2021 நாளிட்ட மண்டல அலுவலரின் அறிக்கையில் இந்நேர்வில் மாநகராட்சி அலுவலர்களால் கடந்த 07.06.2019 அன்று கள ஆய்வு செய்ததன் அடிப்படையில் திரு ஹீராலால் என்பவர், மண்டலம்–4, பகுதி 10, வார்டு 41, கதவு எண்.122, அம்மன் கோவில் தெரு, சிவாஜி நகர், கொருக்குப்பேட்டை, சென்னை – 600 021 என்ற முகவரியில் அனுமதியின்றி கட்டிடம் கட்டி வருவது தெரிய வந்தது என்று தெரிவிக்கப்பட்டிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. மனுதாரர்கள் புகார் அளித்ததன் அடிப்படையில்தான் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிப்பதோடு இடைப்பட்ட காலத்தில் பணியாற்றிய சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய சட்ட விதிகளின்படி துறை ரீதியாக தக்க நடவடிக்கையினை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறை மன்ற நடுவம் ஆணையிடுகிறது. துறைரீதியாக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை குற்றச்சாட்டுக்கள் நகல் ஒன்று இந்த அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் கோரப்படுகிறது.

2021 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு B. விஜயகுமார்,
எண்.14/15, சால்ட் குறுக்குத் தெரு,
துர்காதேவி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

2)திரு M.விஜயன்,
எண்.15/11, 1–வது தெரு,
சாஸ்திரி நகர்,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,

4)மண்டல அலுவலர்,
மண்டலம் –4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை,
தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்